1994 நவம்பர் 9]

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமே போற்றிப் புகழும் ஒப்பற்றத் தலைவியாகத் திகழும் அன்னை சந்தியா தந்த இந்தியத்தாய், சமூக நீதி காத்த வீராங்கனை, நான் கடவுளாக நித்தம் பூஜித்து வணங்கும் இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்காலத்தில் மழை மும்மாரி பொழிந்து, ஆறு, குளம், அணைகள் நிறைந்து வழிகின்றன. தமிழகம் வளமாகவும், செழிப்பாகவும், சிறப்பாகவும் திகழ்ந்து, மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். இந்தநன்னாளில் என் இதய தெய்வத்தின் பொற் பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்கி, அமைச்சர் அவர்கள் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்படும் என்று கூறினார்கள் ; அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

76—

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை மெட்ரிக்குலேஷன் பள்ளிகளாக மாற்றியமைத்தல்

***23327–திரு. வி. கே. லட்சுமணன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆங்கிலோ--இந்தியப் பள்ளிகளை மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக மாற்றியமைக்க தமிழக அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார். ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக மாற்றியமைத்தால் அவை நல்ல முறையில் செயல்படும் என்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன்

[1994 நவம்பர் 9

அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் மீண்டும் மறுபரிசீலனை செய்து அவருக்குத் தகுந்த விடை அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் நல்லமுறையிலேதான் நடந்து வருகின்றன. மேலும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை நடத்துகின்ற நிர்வாகத்தினர் எவரும் இதுவரை மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக அவற்றை மாற்ற வேண்டுமென்று விண்ணப்பிக்கவில்லை. ஆகவே, இந்தக் கேள்வி எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. மு. வெங்கடராமரெட்டி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

77—

தருமபுரி மாவட்டத்தில் தொல்பொருள் அருங்காட்சியகம் அமைத்தல்.

**35754*—திரு. மு. வெங்கடராம ரெட்டி :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒசூர் (அ) தேன்கனிக்கோட்டையில் ஒரு தொல்பொருள் அருங்காட்சியகம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்ப்பு இல்லை.

Thiru. M. Venkatarama Reddi: Mr. Speaker, Sir, in Housur and Denkanikottai Taluks, there are hundreds of stone inscriptions which are centuries old. They are written in Pali and other languages and they depict the history of Dharmapuri District. I have myself seen many of the stone pillars and inscriptions showing the flags and coins used by rulers of successive dynasties of Mysore and other areas, Many of them are now in a dilapidated state and have fallen down. I would like to know whether this government would come forward to preserve those old monuments by setting up a museum at Hosur or